753
IX.D
IX.D 4.3
753

உ

சிவமயம.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பா எட்டாந் திருமுறையுள்

# திருவெம்பாவை.

சைவசித்தாந்த பரமாசாரிய சுவாமிகளுள்

ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளியது.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு சென்னை-20.

தேவார முதலிய பன்னிரு திருமுறைகளே திருவருட்பா என

நிலைநாட்ட வெழுந்த

மருட்பாமறுப்புப் புத்தகப் பெருவென்றியின்

ஞாபகசின்னமாக,

சென்னைப் புரசைப்

பரசிவ தமிழ்வேத பாராயண சபையாரால்

ஷை விவேகானந்தப் பிரசிற் பதிப்பித்து

விநியோகஞ் செய்யப்பட்டது.

1904-ளு டிசம்பர்மீ 18-உ

பிரதி பதினாயிரம்.

சிவமயம்.

எட்டாந் திருமுறைத் திருவருட்பாவுள்

# திருவெம்பாவை.

## சத்தியை வியந்தது.

திருவண்ணாமலையி லருளிச்செய்யப்பட்டது.

திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
  சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
  மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
  போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
  யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். (க)

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகனம்
  பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
  சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
யேசுமிட மீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
  கூசுமலர்ப் பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
  ளீசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய். (உ)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தெ
  னத்த னனந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
  பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
  வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
  யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். (௩)

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். (௪)

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். (௫)

மானேநீ நென்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். (௬)

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். (௭)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ

வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். (அ)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோ
மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலேமேலோ ரெம்பாவாய். (௯)

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (௧௦)

மொய்யார் தடம்பொய்கை புக்குமுகே ரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். (௧௧)

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். (௧௨)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினு
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (கங)

காதார் குழையாடப் பைம்பூண் கலனுடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (கச)

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறு
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (கரு)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். (கசா)

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்

செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (கஎ)

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய்.(கஅ)

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல்பக லெங்கண் மற்றொன் றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். (கக)

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறு மிணையடிகள்
போற்றிமா லன்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். (உ0)

திருச்சிற்றம்பலம்.

எட்டாந் திருமுறைத் திருவருட்பாவுள்
திருவெம்பாவை முற்றிற்று.

ஸ்ரீ மணிவாசகப் பெருமான் மலரடி வாழ்க.

---

சிவமயம்.

ஸ்ரீ பரமாசாரிய ஜகத்குரவேநம:

# திருவருட்பாச் சீர்ணோத்தாரணச் செய்ந்நன்றி தெரித்தல்.

தேவார திருவாசக முதலாப் பெரியபுராண மிறுதியாக நின்ற பன்னிரு திருமுறைகளே திருவருட்பா எனவும், திருமுறைஎனவும் வழங்கப்படற் குரியனவாம். அது அநபாயச் சோழ மகாராசா வின் வாக்கானும், சிவாலய முனிவர் அருளிச்செய்த அருட் பாச் சிறப்பினுனும், ஞானோத்தரத் திருவிருத்தத்தானும், பன் னிரு திருமுறைகளானும், திருமுறை கண்ட புராணத்தானும், திருக்கோவையா ருண்மை என்னும் அரிய நூலானும், திருப் பெருந்துறைப்புராணம், திருவிடைமருதூருலா,போலியருட்பா மறுப்பு, திராவிடப் பிரகாசிகை, குதர்க்காரணிய நாசமகாபரசு கண்டனம், அங்கதப்பாட்டு, பக்தோற்சவ விசிட்டம்,முக்குண வயத்தின் முறைமறந்தறைதல், தமிழ்ப்பே ரகராதி, தத்துவ விவேசினி, அருட்பா வீதென் றறிவுறுத்தல், திருமுறைப் பெருமை முதலாய பற்பல நூல்கள் பத்திரிகைகள் விளம் பரங்கள் என்னு மிவையிற்ருனும், ஆதீனங்களின் பரம்பரை வழக்கானும், ஓதுவார் மூர்த்திகளின் பாராயண வியல்பானும் பிற ஏதுக்களானும் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதின் விளங்கு மென்க.

இங்ஙனமாகவும் சில போலிச் சைவர்கள் கனியிருப்பக் காய் கவர்ந்தாங்கும், கருங்கொடியைச் சுவேத கரடம் என்பார் மானவும் தேவாராதி திருமுறைகளைக் கொண்டுய்யாமே, முக் குண வயத்தான் முறைமறந் தறைந்தும், அவத்தை வசத்தான் அலைந்தும், விதிவலியானே விதி விலக்கு அயர்த்தும், கைதவப் பழிபாவச் செய்கை கண்டும், சிவதூஷணம், சிவனடியார் தூஷ ணம், சைவ சித்தாந்த நிந்தை யிவையிற்றைக் கரந்து கரந்து புரிந்தும், இறந்த கருங்குழிப் போலிச்சைவ மாயாவாதியின் மரு ட்பாக்களைத் திருமுறை யெனவும், திருவருட்பா எனவும் குழ றித் தாம்பவங்தேடி யளருட்சி கொள்வதன்றி, உண்மைச் சை வர்களையும் மயக்கித் தம்பவக் குழியின் வீழ்த்திக் கெடுக்க முயல்வாராயினர்.

அவரது பகைபாவப் பழிவஞ்ச மயக்க மருட்டுருட்டு வெருட்டெலாம் உலகின்கட் சிறிது மோங்காது கழிந் தொழி யவும், தேவார திருவாசக முதலியனவே திருவருட்பா திரு முறை என நண்குணர்து ஓதி யுய்யவும், வாதமுகத்தாலும்,

உபந்நியாச விளம்பர வாயில்களானும், இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாசதர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு என்னும் புத்தக வாயிலானும் போலிச் சைவர்களெல்லாம் வாயெழாது அடங்கியொடுங்கி யொளித்துப்பிதற்றேறவும், சமயாசாரிய சந்தானசாரிய சுவாமிகள் சீர்த்திக ளோங்கவும், கருங்குழி மாயாவாதியின் கரவொழுக்கங்கண்டு எவரும் தெரியாது கெட்டேம் கெட்டேம் என்று கனவினு மவன்பாக் கைதொடேம் என்று ஒதுக்கவுந் தாபனஞ் செய்ததன்றி, மருட்பா மறுப்பு விடயமாகச் சென்னை நகராதிகார நியாயதலத்தில், கனம் பிரதம நியாயாதிபதி அவர்கள் சமுகத்திற் புரிந்த 5610 இலக்க விவகாரத்தினும், அப்புத்தகத்தில் எழுதப்பட்டன வெல்லாம் சத்தியம் சத்தியமே யென்று வாதித்து, பற்பல புத்தகங்கள், பத்திரிகைகள், விளம்பரங்களானும், தக்க மூதறிஞராய சாட்சிகளானும் நிரூபணஞ் செய்து, மாயாவாத தும்சகோளரி என்று அந்த நியாயதல அதிபதி அவர்களாலும் புகழ்ந்து உரைக்கப்பெறீஇ, உலகத்துள்ள உண்மைச் சைவர்கள் யாவர்க்கும் ஒருபெரும் வென்றிகொடுத்து அவர்மகிழ, புகழும் புண்ணியமுங் கொண்ட எங்கள் சபைத்தலைவரும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும், அத்துவித சித்தாந்த மதோத்தாரணரும் ஆகிய யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி ஸ்ரீமத் மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் நீடூழி வாழ்க.

இத்திருவருட்பா வென்றி சேர்ந்து பயனுற, செய்ய சிந்தையராய்ப் போந்து, தேவாரத் திருமுறைகளே திருவருட்பா, கருங்குழியார் மருளர், அவர் பாடல்கள் மருட்பா என்றும் மெய்யவை யுரைத்தும் செய்வன செய்தும் நின்ற ஸ்ரீசிதம்பரம், திருக்காஞ்சி, சென்னை, திருப்பாதிரிப்புலியூர், கூடலூர், திருப்பரங்குன்றம், மதுரை, புதுச்சேரி, திருநெல்வேலி, கும்பகோணம், வேதாரணியம் திருமுருகன் பூண்டியெனும் திருத்தருப்பூண்டி, விழுப்புரம், அயன்புரம், குத்தம்பாக்கம், வேதாரணியம், இராமநாதபுரம், திருச்செந்தூர், இளியனூர், சிக்கந்திராபாத்து, தேவகோட்டை, அமராவதி புதூர், ஆரணி முதலாய வூர்களினுள்ள மகா வித்வசிரோமணிகள், குருக்கள்மார், மடாதிபதிகள், ஆதீனத்தார், பத்திராதிபர்கள், உத்தியோகத்தர்கள், பிரபுக்கள் என்னு மிவர்களரு நன்றிகளை யுலகம் விழுமிதினென்றும் போற்றுமென்க. சைவ சித்தாந்த மகாபீடமாய், உபயவேத சித்தாந்தப் பிரவர்த்தகா சாரியராய் விளங்கும் சைவசித்தாந்தபானு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சேந்திநாத சற்குருசுவாமிகளின் திருவருட்பாப் பத்திமையையும், அவர்கள் நியாயதலத்

திலே, வெண்கலக் கோட்டையில் வேழத்தரசு புக்காலென்னச் சான்று கூறிய, மருட்பா மறுப்பு விஜய தாபன வச்சிர மொழிகளையும் உன்னி யுன்னிப் போற்றுத வுண்மைச் சைவர் யாரே? இராமலிங்கபிள்ளை பாடல் மருட்பா என்றும், தேவார திருவாசகாதி திருமுறைகளே திருவருட்பா என்றும் நீதித்தலத்து விவாதித்து மருட்பா மறுப்பின் ஜயத்தை வைத்த சென்னை யுயர்தர நீதித்தலத்து நியாய துரந்தரர்களாகிய பிரமஸ்ரீ V. விசுவநாத சாஸ்திரியார் B.A. B. L. அவர்களுக்கும், பிரமஸ்ரீ M. சாமராவ் B.A B.L அவர்கட்கும் மிக்கநன்றி செலுத்துகின்றேம்..

தேவகோட்டை, அமராவதி புதூர் முதலாய இடங்களில் வசிக்கும் பன்னிரு திருமுறைத் திருவருட்பாப் பத்தியின் மேம்பட்ட ம-ள-ள-ஸ்ரீ, அரு. அரு. சோம. சோமசுந்தரச் செட்டியார் அவர்கள் முதலாய வணிகப் பிரபுக்களைக் கொண்டு பொருளுதவுவித்ததன்றி, தாமும் திருமுறைச் சிரன்பு மேலீட்டானே வேண்டும் போதெல்லாம் உதவி,

திருமுறையாந் திருவருட்பாச் சிறக்குமொரு வென்றியெனு
மருவொருபே ரமிழ்தமதை யகப்பெருநோய் தணிப்பதற்குக்
குருவருளாற் செவிவாயிற் கொண்டுவகைக் கடலாடன்
மருவுவது மெந்நாளோ வரைபொடித்த செந்தூரோய்.

என்று அகோராத்திரம் வேண்டி, இத்திருவருட்பா வென்றிக் கருமமே கண்ணுயினவரும், சைவசித்தாந்த பரிபாலன அருஞ் செயனிமித்தம் தம் வாழ்நா ளாதியவற்றை யொப்புவித்தவரும் ஆகிய யாழ்ப்பாணத்து மகாவித்வான் ஸ்ரீமத் சி. சுவாமிநாத பண்டிதர் அவர்களின் "திருவருட்பா" முழக்கரூப் பேரவை யூழி யூழி சிறந்து வாழிய. திருவருட்பாச் சிரத்தை மேன்மேலும் ஊக்க அவற்றின் சீர்ணோத்தாரண வழக்குவெற்றி காரணமாகப் பலப்பல சாதகங்கள் புரிந்து கட்கிமை போனின்று பேருதவி புரிந்த சென்னைச் சிந்தாதிரிப்பேட்டைமங்கபதிநாயகன் வீதி ஸ்ரீமந் ஆ. வேதாசல முதலியார் அவர்களும், இராமநாதபுரம் ம-ள-ள-ஸ்ரீ, வெள்ளையதேவர் அவர்களும், காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரேசுரன் கோவில் தர்மகர்த்தரும் கௌரவ நியாயாதிபதியும் ஜமீந்தாரரும் ஆகிய ஸ்ரீமந் மு. சுப்பராய முதலியார் அவர்களும், ஏனைய கனவான்களும், சபையார்களும் வாழ்க வென்று திருவருளை வேண்டுகின்றேம்.

சென்னை } இங்ஙனம்,
18-12-04 } புரசைப் பரசிவ தமிழ்வேத பாராயண சபையார்.

உ

சிவமயம்.

புதுச்சந்நிதிக் கந்தன்றுணை.

# அருட்பா வாற்றுப்படை.

---

இப்பெயர் வாய்ந்த சிறந்த பிரபந்த மொன்று எமது ஆசிரியர் மாயாவாத தும்சகோளரி ஸ்ரீமந் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களால், உண்மைச் சிவநேயமுடையார் பலர்வேண்டுகோட்படி, யாக்கப்பட்டு வருகின்றது. அஃதியாப்பான் புக்க ஏதேதோவெனில், கலகக்கைதவப் பழிபாவச் செய்கைகள் பலவுங் கண்டிறந்தானொருவன், மருள் வயத்தானே தன்னையருள் பெற்றான்போற் காட்டிப் பொய்யேகட்டி, சிவநிந்தை, சிவனடியார் நிந்தை, வேதசிவாகம நிந்தை, தேவாரத் திருமுறை நிந்தை, சிதம்பரநிந்தை, சித்தாந்த நிந்தை முதலாய ஆற்றரு நிந்தைகளைப் பொதிந்து பொருந்தாப் பெயர்புனைந்து வெளியிட்ட மருட்பாடல்களை, நோனுமையா னெழுந்த சிற்சில போலிச் சைவர்கள், இப்பாடல்களை திருமுறை, திருவருட்பா என்று இயற்கை யொளிகொண்ட மாணிக்கத்தைக் கழித்துச் செயற்கைச் செங்கல்லை யதுவெனப் பகர்வார்மானப் பிதற்றுமுரை கேட்டு ஐயமுற்றுநின்ற, பரபசிவனருள் பெற விரும்பிய அன்பர் கூட்டங்களைக் கண்டுழி, உள நனிவருந்தி அவர்மயலிரியுமாறு, அருளியல்பு, அருட்பா என்பத னிலக்கணம், அதன் பொதுவியல்பு, சிறப்பியல்பு, அவ்வருளினின்றார் தன்மை, அவரான்முற்றும் பாக்களின் சிறப்பு, அவற்றின் விளைவுகள், அவை தேவார முதலாகப் பெரியபுராண மிறுதியாக வுள்ளவெனல், அவையொழிய வேறருட்பா வுளதென்பது பொய், அங்ஙனங்கோடல் இப்பியை வெள்ளியெனவும், கயிற்றைப் பாம்பெனவும் கொள்ளும் பரிபவச் செயல் என்பது, அருள்பெறுமருளரினியல்பு, அன்னோர் பாக்களின்கேடு, அவற்றைக் கண்டித்த பெரியோர்களிவர்; நூல்களிவை எனல், இன்னின்ன வேதுக்களான் அவர்பாக்கள் மருட்பாவெனல், அவ்வுண்மை பலவாற்றானும் நிரூபிக்கப் பட்டமை, திருவருட்பாச்சீர்ணோத்தாரண நன்றி முதலியவற்றை விளங்க வுரைத்துத் தெருட்டி, தேவார முதலிய திருவருட்பாக்களி னிடத்தே யவர்களை யெல்லாம் வழிப்படுத்துஞ் சிறப்பினை யுடையது. இது விரைவில் வெளிவரும்.

இங்ஙனம்

காஞ்சிச் சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டச் சபையாருள்

**பெரு. கோவிந்தராச முதலியார்**

25-வைகுண்டப்பெருமாள் கோவில் வீதி,

காஞ்சி.